**O.S.No. 115/2020 நாள் 16.10.2025 PW 5 – திருமதி. தனலெட்சுமி**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (பிரதிவாதிதரப்பில்)

இந்த வழக்கு சொத்துக்கள் ஆத்திக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த சொத்துக்களை எல்லாம் 08.10.1957, 20.11.1982, 13.09.1991 ஆகிய தேதியிட்ட கிரைய பத்திரங்கள் மூலம் வாதி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். ஆத்தி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அப்பா ஆவார். 2 வது தபசில் சொத்துக்களை என் தகப்பனார்தான் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். சொத்து சம்மந்தப்பட்ட பட்டா, தீர்வை கட்டி என் அப்பா அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் என் அப்பாதான் செலவு செய்தார் என்றால் சரிதான். திருமணத்தின்போது சீர்சிராட்டுக்கள் எல்லாம் கொடுத்தார் என்றால் சரிதான். சொத்துக்கள் எல்லாம் என் அப்பா தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்து என்றால் இல்லை, நாங்கள் எல்லாம் சேர்ந்துதான் வாங்கினோம். அந்த சொத்தை என் அப்பா யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் நான் சின்னபிள்ளைகளாக இருந்ததால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. சொத்து வாங்குவதற்கு என் அப்பாதான் பணம் கொடுத்தார் என்றால் நாங்கள் உழைத்து அவர் கையில்தான் பணம் கொடுத்தோம். அதிலிருந்து வாங்கினார். இந்த சொத்துக்களை என் அப்பா வாங்கும்போது எனக்கு வயது எவ்வளவு இருக்கும் என்றால் 12 வயது இருக்கும். 13.10.2020 ல் என் வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட வா.சா.ஆ–9 அறிவிப்பு எனக்கு தெரிந்துதான் அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–9 ல் பாரா 2 ல் ஆத்தியின் பெயரிலிருந்து பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்பட்ட சொத்துக்களும் ஆத்தியின் சுயசம்பாத்தியத்திலிருந்து வாங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது எற்னால் சரியல்ல. வா.சா.ஆ–9 ல் நாங்கள் உழைத்துதான் சொத்து வாங்கினோம் என்று எந்த பாராவிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஆத்தியின் தனிப்பட்ட கிரைய சொத்துதான் என்றாலும், நாங்கள் யாரும் வேலைக்கு சென்று வாங்கவில்லை என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள்தான் உழைத்து வாங்கினோம், என் அப்பாவிற்கு வேலைக்கு போக இயலாது. 13.03.1995 ல் என் அப்பா அவர் சுயநினைவுடன், சுய அறிவுடன் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் சகோதரிகள் அனைவருக்கும் என் அப்பாதான் சீர் சிராட்டுகள் கொடுத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தது முத்துராஜ் என்ற சகோதரர் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் 1991 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் அவரின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது சகோதரர் இறந்தபிறகு 1 முதல் 3 பிரதிவாதிகளை பராமரித்து வந்ததே என் அப்பாதான் என்றால் சரிதான். என் அப்பா அவரது ஆயுளுக்கு பிறகு எங்களுக்கு சீர் சீராட்டுக்கள் செய்து திருமணம் செய்து வைத்ததாலும், அவர் பிரதிவாதிகளுக்கு

சொத்தை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. 40 வயதிற்கு பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள் சொத்தை அனுபவத்தி கொள்ளலாம் என்று உயில் ஒன்று என் அப்பா எழுதி வைத்தார் என்றால் அது பற்றி தெரியாது. 2 வது தபசில் சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. 17.02.2019 அன்று என் அப்பா இறந்துவிட்டார் என்றால் வருடம் ஞாபகமில்லை. தற்போது 3 ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சொத்துக்கள் தற்போது பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. சொத்துக்களின் பட்டா எல்லாம் 3 ம் பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த சொத்துக்களுக்கு அவர்தான் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியவில்லை. 1 ம் தபசில் சொத்தில் 1 இலக்க சொத்தில்தான் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில்தான் என்னுடைய சகோதரனின் பிள்ளைகள் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அது வடக்கு தெருவில் உள்ளது. இந்த சொத்துக்களில் நாங்கள் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா எழுதி வைத்த உயில் ஆவணத்தின் விவரம் தெரியுமா என்றால் நான் படித்துக்கொண்டிருந்ததால் எனக்கு தெரியாது. தபசில் சொத்தில் எனக்கு எந்த பாகமும் வரவேண்டியதில்லை என்றுசொன்னால் சரியல்ல. என் அப்பாவின் சொத்து, நாங்கள் அனைவரும் சம்பாதித்து வாங்கியது. தபசில் சொத்துக்கள் உயில் ஆவணத்தின்படி எனது சகோதரனின் பிள்ளைகள்தான் தனிப்பட்டு அனுபவம் செய்து வருகிறார் அதனால் நாங்கள் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாவிற்கு பராமரிப்பு செலவிற்கு தேவைப்படுகிறது. என் அப்பா உயில் ஆவணம் அவர் இறந்த பிறகு அமலுக்கு வந்தது என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கில் எனக்கு எந்த பங்கும் சேரவேண்டியதில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.